மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2022 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடித்திங்கள் 20 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.439/2021-ல்**

**அசல் வழக்கு எண். 162/2019**

மணிமேகலை ...மனுதாரர் /வாதி

// **எதிர்** //

மாரிமுத்து ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 10.12.2021 ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சூழ்நிலையில் கடந்த 28.07.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. ஜீவானந்தம்** அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. V. ரவிச்சந்திரன்** அவர்கள் முன்னிலையாகியம், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று **05.08.2022** இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணத்தினை வாதி தரப்பு கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர

உறுத்துக்கட்டளைப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது இறந்துபோன மனுதாரர்/வாதியின் மகன் சரேஷ்க்கு சொந்தமாக இருந்து வந்து அவர் இறந்தபிறகு அவரது வாரிசுதாரர் என்ற முறையில் வாரிசு சான்று வழக்கு தாக்கல் செய்தபிறகு 10.02.2020 ம் தேதியன்று வழங்கப்பட்டுள்ள, சான்றை மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

வழக்கு செய்ததற்கு பின்பு பெறப்பட்ட மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்ய முடியாது என்றும், அதனால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையிலிருந்தபோது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

ஒரு வழக்கில் அதன் சங்கதியை நிரூபிக்க அல்லது மெய்ப்பிக்க வேண்டுமென்றால் அதனை ஆவண சாட்சியம் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் வாயிலாகத்தான் நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலும். அவ்வகையில் ஒரு ஆவணத்தை அதன் சங்கதியை பொருத்து குறியீடு செய்வதால் மட்டுமே அந்த ஆவணத்தை நிரூபித்ததாக

எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் குறியீடு செய்வது என்பது வேறு, நிரூபணம் அல்லது மெய்ப்பித்தல் வேறு என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

மேலும், அந்த ஆவணத்தின் சங்கதியை மெய்ப்பிக்கவேண்டுமெனில் அந்த ஆவணத்தை கண்டிப்பாக குறியீ செய்யவேண்டும் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இம்மனுவைப்பொருத்தவரை வாதி/மனுதாரர் தாக்கல் செய்த மனுவின்படி மேற்படி 10.02.2020 ம் தேதியில் வழக்கிற்கு பின்னிட்டு வருவாய்த்துறை அதிகாரி அவர்களால் கொடுக்கப்பட்ட வாரிசுசான்றை தனது தரப்பில் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்யவேண்டும் என்பதை பொருத்து இம்மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதி மேற்படி நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் செல்லத்தக்கதல்ல என்று கூறியுள்ளதை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில்....

இம்மனுவின் மனுதாரர் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அவர் தனது தரப்பினை இந்நீதிமன்றத்திற்கு முழுவதுமாக எடுத்துச்சொல்வதற்கு கூடுதலாக ஒரு வாய்ப்பினை இந்நீதிமன்றத்தில் கேட்டுள்ளார். மேற்படி வாய்ப்பில் மேற்படி மனுதாரர் தாக்கல் செய்ய முனைந்துள்ள ஆவணமானது இவ்வழக்கின் தன்மையை தீர்மானிக்க உதவுமா என்பதை வழக்கு விசாரணையின் முடிவில் மட்டுமே தீர்வுகாண இயலும்.

மேலும், வாரிசு சான்றிதழ் என்பது ஒரு நபரின் இறப்பிற்கு பின்பு அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு கிடைக்கப்படும் உரிமையின் தொடர்ச்சியே என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொண்டு, இம்மனுவினை நீதியின்பால் அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்ம் ஏற்படப்போவதில்லை என்பதை கருத்திற்கொண்டு இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் உண்மை தன்மை,

நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 05.08.2022)அவையறியப் பகரப்பட்டது.

**A S AMEERDHEEN**
Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-**

**இருதரப்பிலும்** : இல்லை

**A S AMEERDHEEN**
Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)